©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 46] CHENNAI, WEDNESDAY, NOVEMBER 24, 2010
Karthigai 8, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 3(b)

**Notifications issued by Quasi-Government bodies and Public Sector Undertakings.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

| | Pages. |
|---|---|
| **UNIVERSITY AUTHORITIES** | |
| **தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்** | |
| தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 21(பி) வகுப்பு II—பிற உறுப்பினர்கள் விதி I–இன்கீழ் ஆட்சிக்குழுவிற்குப் பேரவைத் தொகுதியினின்று தேர்தல் அறிவிக்கை .. .. .. .. .. | 116 |

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### UNIVERSITY AUTHORITIES

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

**தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 21 (பி) வகுப்பு II—பிற உறுப்பினர்கள் விதி I—இன்கீழ் ஆட்சிக்குழுவிற்குப் பேரவைத் தொகுதியினின்று தேர்தல் அறிவிக்கை.**

*(ந.க. எண் 422/க1/2009.)*

No. VI-3(b)/47/2010.

தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 21(பி) வகுப்பு II—பிற உறுப்பினர்கள் விதி I—இன் வரையறைக்குட்பட்டுத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் அலுவல்வழி உறுப்பினரல்லாத ஒருவரை தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராக மூன்று ஆண்டுகள் அல்லது பேரவையில் அவர்களின் பதவிக்காலம் இவற்றில் எது முன்னரோ அதுவரை பணியாற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேவையானால் இது குறித்து இரகசிய வாக்குப்பதிவு பேரவைக் கூடும் நாளில் நடைபெறும்.

பேரவை உறுப்பினர் எவரும் அலுவல் வழி உறுப்பினர் அல்லாத ஒருவரை வேட்பாளராக நியமனம் செய்யலாம். ஒவ்வொரு வேட்பு மனுவும் அதற்குரிய படிவத்தில் எழுத்து மூலமாக ஒரு தேர்வாளரால் முன்மொழியப்பட்டு மற்றொரு தேர்வாளரால் வழிமொழியப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு வேட்பு மனுவுடனும் ஆட்சிக்குழுவில் தான் ஏற்கனவே உறுப்பினர் இல்லை என்றும் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆட்சிக்குழுவில் பணியாற்ற இசைவதாகவும் உறுதிமொழிப் படிவத்தை நிறைவு செய்து வேட்பாளர் கையொப்பமிட்டு இணைத்தனுப்ப வேண்டும்.

இத் தேர்தலில் ஒரு இடம் மட்டுமே நிரப்பப்பட வேண்டியுள்ளதால், ஒரு தேர்வாளர் ஒருவருக்கு மட்டுமே முன்மொழிபவராக அல்லது வழிமொழிபவராக இருக்க இயலும்.

ஒவ்வொரு வேட்பு மனுவும் ஓர் உறையிலிடப்பட்டு அதன்மேல் "ஆட்சிக்குழுவிற்குப் பேரவைத் தொகுதியிலிருந்து வேட்பாளர் நியமனம்" என்று எழுதப்பட்டு ஒப்புகைச் சீட்டுடன் கூடிய பதிவு அஞ்சலில், "பதிவாளர் மற்றும் தேர்தல் அலுவலர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்—613 010" என்னும் முகவரிக்கு 09—12—2010 பிற்பகல் 4.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும். வேட்பு மனுக்களை அலுவலக நேரத்தில் தேர்தல் அலுவலரான இப்பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களிடம் நேரடியாகவோ நபர் மூலமாகவோ மேலே குறித்த காலத்திற்குள் கிடைக்குமாறும் அனுப்பிவைக்கலாம்.

மேலே கூறப்பட்டுள்ளபடி முறையாக அனுப்பப்படாத வேட்பு மனுக்கள் செல்லுடமையற்றவை எனச் சாற்றப்படும்.

வேட்பு மனுக்கள் 09—12—2010 மாலை 5.00 மணிக்குப் பல்கலைக்கழக அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படும். செல்லுடமையுள்ள வேட்பாளர் பட்டியல் அன்றைய நாளே வெளியிடப்படும்.

எந்த வேட்பாளரும் தம் வேட்பு மனுவை எழுத்து மூலம் அறிவித்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய திரும்பப் பெறும் அறிவிப்பை 16—12—2010 பிற்பகல் 3.00 மணிக்குள் கிடைக்குமாறு "பதிவாளர் மற்றும் தேர்தல் அலுவலர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்—613 010" என்ற முகவரிக்கு ஒப்புகைச்சீட்டுடன் கூடிய பதிவு அஞ்சலிலோ, மேலே குறித்த நாள் மற்றும் நேரத்திற்குள் தேர்தல் அலுவலரிடம் நேரடியாகவோ ஆள் மூலமாகவோ சேர்ப்பிக்கலாம்.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நேரம் முடிந்த பிறகு அன்றைய நாளே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். இறுதி வேட்பாளர் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களைவிடக் கூடுதலாக இருந்தால் 4—1—2011 முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை மந்தண வாக்குப்பதிவு முறையில் தேர்தல் நடத்தப்படும்.

தஞ்சாவூர்,
2010 அக்டோபர் 27.

**முனைவர் சா. பி. சரவணன்,**
*பதிவாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU